# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
# Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com


**8 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## நாமே எதிர்காலச் சிற்பிகள்

வெள்ளை உள்ளங்கொண்ட வண்ண மலர்கள் நாங்கள். கள்ளங்கபடமற்ற பட்டாம் பூச்சிகள் போலப் பறந்து திரிகின்றோம். எத்தனை எத்தனை திறன்கள் எமக்குள்ளே கொட்டிக் கிடக்கின்றன! தமிழின் இனிமை எங்கள் நாவில் தவழ, தமிழர் பண்பாடுகளோடு நாம் வளர்ந்திட எண்ணுகின்றோம்.

எங்கள் பெற்றோரின் வழிகாட்டலும் நல்லாசிரியர்களின் நெறிப்படுத்தலும் எம்மைச் சீராக்கி நிமிர்த்தும் என்பதை மனத்தில் இருத்துகின்றோம். எமக்கான தாயகத்தை மீட்டெடுக்க உயிர்க்கொடை தந்தவர்கள் மாவீரர்கள். அவர்களின் ஈகமும் வீரமும் எமக்குத் துணையாக வளம் சேர்ப்பவை என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

எங்கள் எதிர்காலம் பற்றிய பல கனவுகளை அடைகாக்கும் தாய்ப்பறவையாய் விளங்கும் எங்கள் தலைவர் மாமாவின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றோம். மலர்கின்ற தமிழீழ தேசத்தைக் கட்டியெழுப்பும் தலைவர்களாக, கல்விமான்களாக, அறிவியலாளராக, கலைஞர்களாக, விவசாயிகளாக, தளபதிகளாக நாம் செதுக்கப்பட வேண்டும் எனத் தலைவர் மாமா விரும்பினார். அவரின் விருப்பத்தை ஈடேற்றும் பொறுப்பை எங்கள் கைகளில் எடுக்கின்றோம்.

எதிர்காலத்தில் தமிழர் வரலாற்றைச் செதுக்கப்போகும் சிற்பிகளாய் எம்மை வளப்படுத்த முனைகின்றோம். நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை. எங்களின் சின்ன மனங்களில் நல்லநல்ல விடயங்களை விதைக்கின்றோம். தாய்மொழிப்பற்றை எங்கள் மனங்களிலே பதியம் இடுகின்றோம்.

அன்பும் பண்பும் நீதியும் நேர்மையும் நிறைந்த நல்ல மனிதர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்றோம். காலத்தின் வேகத்தோடு இணைந்து பயணிக்கின்றோம். காந்தள் மலர் கொண்டு கல்லறைத் தெய்வங்களை வணங்குகின்றோம். எண்ணித் துணிகின்றோம். நாமே எதிர்காலச்சிற்பிகள்.

நன்றி

வணக்கம்.